ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# நாலாயிர திவ்ய ப்ரபந்தத் தனியன்கள்

## திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழிகளின் தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தது

கு3ருமுகமநதீ4த்ய ப்ராஹ வேத3ாநஷேஷ2ாந்
        நரபதி2பரிக்லுப்தம் ஷுல்கமாத3ாதுகாம: |
ஷ்வஷு2ரமமரவந்த்3யம் ரங்க3நாத2ஸ்ய ஸாக்ஷாத்
        த்3விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

### பாண்டிய பட்டர் அருளிச் செய்தவை

மின்னார் தடமதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொருகால் *
சொன்னார் கழற் கமலம் சூடினோம் * - முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் * கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர் பிரான் வந்தான் என்று *
ஈண்டிய சங்கம் எடுத்தூத * - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான் *
பாதங்கள் யாமுடைய பற்று

---

## திருப்பாவை தனியன்கள்

### பராசர பட்டர் அருளிச் செய்தது

நீளா துங்க3 ஸ்தந கி3ரி தட ஸுப்தம் உத்3பே3ாத்4ய க்ருஷ்ணம்
        பாரார்த்2யம் ஸ்வம் ஷ்ருதி ஷத ஷிரஸ் ஸித்3த4ம் அத்4யாபயந்தீ |
ஸ்வோச்சிஷ்ட2ாயாம் ஸ்ரஜி நிக3ளிதம் யா ப3லாத் க்ருத்ய பு4ங்க்தே
        கோ3த3ா தஸ்யை நம இத3ம் இத3ம் பூ4ய ஏவாஸ்து பூ4ய: ||

### உய்யக்கொண்டார் அருளிச் செய்தவை

அன்னவயல் புதுவை ஆண்டாள் * அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம் * - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை * பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே! * தொல்பாவை

பாடி அருள வல்ல பல்வளையாய்! * - நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம் *
நாம் கடவா வண்ணமே நல்கு

---

## நாச்சியார் திருமொழித் தனியன்கள்

### திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச் செய்தது

அல்லி நாள் தாமரை மேல் ஆரணங்கின் இன்துணைவி *
மல்லி நாடாண்ட மடமயில் - மெல்லியலாள் *
ஆயர் குல வேந்தனாகத்தாள் * தென் புதுவை
வேயர் பயந்த விளக்கு

### முதலாவது வானமாமலை ஸ்வாமி அருளிச் செய்தது

கோலச் சுரிசங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும்
சீலத்தனள் * தென் திருமல்லி நாடி * செழுங்குழல் மேல்
மாலைத் தொடை தென்னரங்கருக்கு ஈயும் மதிப்புடைய
சோலைக் கிளி * அவள் தூய நற்பாதம் துணை நமக்கே

---

## பெருமாள் திருமொழித் தனியன்கள்

### உடையவர் அருளிச் செய்தது

இன்னமுதம் ஊட்டுகேன் இங்கே வா பைங்கிளியே! *
தென்னரங்கம் பாட வல்ல சீர்ப் பெருமாள் * - பொன்னஞ்
சிலை சேர் நுதலியர் வேள் சேரலர் கோன் * எங்கள்
குலசேகரன் என்றே கூறு

### மணக்கால் நம்பி அருளிச் செய்தது

ஆரம் கெடப் பரன் அன்பர் கொள்ளார் என்று * அவர்களுக்கே
வாரங்கொடு குடப் பாம்பிற் கை இட்டவன் * மாற்றலரை
வீரங்கெடுத்த செங்கோல் கொல்லி காவலன் வில்லவர் கோன் *
சேரன் குலசேகரன் முடி வேந்தர் சிகாமணியே

---

## திருச்சந்த விருத்தத் தனியன்கள்

### திருக்கச்சி நம்பி அருளிச் செய்தவை

தருச்சந்தப் பொழில் தழுவு தாரணியின் துயர் தீர *
திருச்சந்த விருத்தம் செய் திருமழிசைப் பரன் வருமூர் *
கருச்சந்தும் காரகிலும் கமழ்கோங்கும் மணநாறும் *
திருச்சந்தத்துடன் மருவு திருமழிசை வளம் பதியே

உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து * தம்மில்
புலவர் புகழ்க் கோலால் தூக்க * - உலகு தன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் * மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது

---

## திருமாலைத் தனியன்

### திருவரங்கப்பெருமாள் அரையர் அருளிச் செய்தது

மற்றொன்றும் வேண்டா மனமே! * மதிள் அரங்கர்
கற்றினம் மேய்த்த கழல் இணைக் கீழ் * - உற்ற
திருமாலைப் பாடும் சீர்த் தொண்டரடிப்பொடி எம்
பெருமானை * எப்பொழுதும் பேசு

---

## திருப்பள்ளியெழுச்சி தனியன்கள்

### திருமாலையாண்டான் அருளிச் செய்தது

தமேவ மத்வா பரவாஸுதே3வம்
ரங்கே3ஷயம் ராஜவத3ர்ஹணீயம் |
ப்ராபே3ாதி4கீம் யோக்ருத ஸூக்திமாலாம்
ப4க்த2ாங்க்4ரி ரேணும் ப4க3வந்தமீடே3 ||

### திருவரங்கப்பெருமாள் அரையர் அருளிச் செய்தது

மண்டங்குடி என்பர் மாமறையோர் மன்னிய சீர் *
தொண்டரடிப்பொடி தொன்னகரம் * - வண்டு
திணர்த்த வயல் தென்னரங்கத்தம்மானைப் * பள்ளி
உணர்த்தும் பிரான் உதித்த ஊர்

---

## அமலனாதிபிரான் தனியன்கள்

### பெரிய நம்பிகள் அருளிச் செய்தது

ஆபாத$_3$சூட$_2$மநுபூ$_4$ய ஹரிம் ஷயாநம்
மத்$_4$யே கவேரது$_3$ஹிதுர் முதி$_3$தாந்தராத்மா |
அத்$_3$ருஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிஷ்சிகாய மநவை முநிவாஹநம் தம் ||

## திருமலை நம்பிகள் அருளிச் செய்தது

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடை உந்தி *
தேட்டரும் உதர பந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய் *
வாட்டமில் கண்கள் மேனி முனி ஏறித் தனி புகுந்து *
பாட்டினால் கண்டு வாழும் பாணர் தாள் பரவினோமே

---

## பெரிய திருமொழித் தனியன்கள்

## திருக்கோட்டியூர் நம்பி அருளிச் செய்தது

கலயாமி கலித்$_3$வம்ஸம் கவிம் லோக தி$_3$வாகரம் |
யஸ்ய கோபி$_4$: ப்ரகாஷாபி$_4$: ஆவித்$_3$யம் நிஹதம் தம: ||

## எம்பெருமானார் அருளிச் செய்தது

வாழி பரகாலன் வாழி கலிகன்றி *
வாழி குறையலூர் வாழ் வேந்தன் * - வாழியரோ
மாயோனை வாள் வலியால் மந்திரம் கொள் மங்கையர் கோன் *
தூயோன் சுடர்மான வேல்

## ஆழ்வான் அருளிச் செய்தது

நெஞ்சுக்கு இருள் கடி தீபம் அடங்கா நெடும் பிறவி
நஞ்சுக்கு நல்ல அமுதம் * தமிழ நன்நூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம் ஆரணசாரம் * பர சமயப்
பஞ்சுக் கனலின் பொறி * பரகாலன் பனுவல்களே

## எம்பார் அருளிச் செய்தது

எங்கள் கதியே! இராமாநுச முனியே! *
சங்கை கெடுத்தாண்ட தவராசா! * - பொங்கு புகழ்
மங்கையர் கோன் ஈந்த மறை ஆயிரம் அனைத்தும் *
தங்கு மனம் நீ எனக்குத் தா

## மணவாள மாமுனிகள் அல்லது சோமாசியாண்டான் அருளிச் செய்தது

மாலைத் தனியே வழி பறிக்க வேணும் என்று *
கோலிப் பதிவிருந்த கொற்றவனே! * - வேலை
அணைந்தருளும் கையால் அடியேன் வினையை *
துணித்தருள வேணும் துணிந்து

---

## முதல் திருவந்தாதி தனியன்

### முதலியாண்டான் அருளிச் செய்தது

கைதை சேர் பூம்பொழில் சூழ் கச்சி நகர் வந்துதித்த *
பொய்கைப் பிரான் கவிஞர் போரேறு * - வையத்து
அடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந்தாதி *
படிவிளங்கச் செய்தான் பரிந்து

---

## இரண்டாம் திருவந்தாதி தனியன்

### திருக்குருகைப் பிரான் பிள்ளான் அருளிச் செய்தது

என் பிறவி தீர இறைஞ்சினேன் இன்னமுதா *
அன்பே தகளி அளித்தானை * - நன்புகழ் சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும் * கடல் மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்

---

## மூன்றாம் திருவந்தாதி தனியன்

### குருகை காவலப்பன் அருளிச் செய்தது

சீராரும் மாடத் திருக்கோவலூர் அதனுள் *
காரார் கருமுகிலைக் காணப் புக்கு * - ஓராத்
திருக்கண்டேன் என்றுரைத்த சீரான் கழலே *
உரைக் கண்டாய் நெஞ்சே! உகந்து

---

## நான்முகன் திருவந்தாதி தனியன்

### சீராமப் பிள்ளை அருளிச் செய்தது

நாராயணன் படைத்தான் நான்முகனை * நான்முகனுக்கு
ஏரார் சிவன் பிறந்தான் என்னுஞ்சொல் * - சீரார்

மொழி செப்பி வாழலாம் நெஞ்சமே! * மொய்பூ
மழிசைப் பிரான் அடியே வாழ்த்து

---

## திருவிருத்தத் தனியன்

### கிடாம்பியாச்சான் அருளிச் செய்தது

கருவிருத்தக் குழி நீத்த பின் காமக் கடுங்குழி வீழ்ந்து *
ஒருவிருத்தம் புக்குழலுறுவீர்! உயிரின் பொருள்கட்கு *
ஒருவிருத்தம் புகுதாமால் குருகையர் கோன் உரைத்த *
திருவிருத்தத்து ஓரடி கற்றிரீர் திருநாட்டகத்தே

---

## திருவாசிரியத் தனியன்

### அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச் செய்தது

காசினியோர் தாம் வாழக் கலி யுகத்தே வந்துதித்து *
ஆசிரியப் பா அதனால் அருமறை நூல் விரித்தானை *
தேசிகனைப் பராங்குசனைத் திகழ் வகுளத் தாரானை *
மாசடையா மனத்து வைத்து மறவாமல் வாழ்த்துதுமே

---

## பெரிய திருவந்தாதி தனியன்

### எம்பெருமானார் அருளிச் செய்தது

முந்துற்ற நெஞ்சே! முயற்றி தரித்துரைத்து *
வந்தித்து வாயார வாழ்த்தியே * - சந்த
முருகூரும் சோலை சூழ் மொய்பூம் பொருநல் *
குருகூரன் மாறன் பேர் கூறு

---

## திருவெழுகூற்றிருக்கை தனியன்கள்

### எம்பெருமானார் அருளிச் செய்தது

வாழி பரகாலன் வாழி கலிகன்றி *
வாழி குறையலூர் வாழ் வேந்தன் * - வாழியரோ
மாயோனை வாள் வலியால் மந்திரம் கொள் மங்கையர் கோன் *
தூயோன் சுடர்மான வேல்

சீரார் திருவெழுகூற்றிருக்கை என்னும் செந்தமிழால் *
ஆராவமுதன் குடந்தைப் பிரான் தன் அடி இணைக் கீழ் *
ஏரார் மறைப் பொருள் எல்லாம் எடுத்து இவ்வுலகு உய்யவே *
சோராமல் சொன்ன அருண்மாரி பாதம் துணை நமக்கே

---

## சிறிய திருமடல் தனியன்

### பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச் செய்தது

முள்ளிச் செழுமலரோ தாரான் முளை மதியம் *
கொள்ளிக்கு என் உள்ளம் கொதியாமே * - வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி *
மருவாளன் தந்தான் மடல்

---

## பெரிய திருமடல் தனியன்

### பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச் செய்தது

பொன்னுலகில் வானவரும் பூமகளும் போற்றி செய்யும் *
நல் நுதலீர்! நம்பி திருநறையூரர் * - மன்னுலகில்
என் நிலைமை கண்டும் இரங்காரேயாமாகில் *
மன்னு மடல் ஊர்வன் வந்து

---

## கண்ணிநுண் சிறுத்தாம்பு தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தவை

அவிதி$_3$தவிஷயாந்தர: ஷட$_2$ாரேருபநிஷத$_3$ாமுபக$_3$ாநமாத்ரபே$_4$ாக$_3$: |
அபி ச கு$_3$ணவஷாத்ததே$_3$கஷேஷீ மது$_4$ரகவிஹ்ருத$_3$யே மமாவிரஸ்து ||

வேறொன்றும் நான் அறியேன் வேதம் தமிழ் செய்த *
மாறன் சடகோபன் வண்குருகூர் - ஏறு * எங்கள்
வாழ்வாம் என்றேத்தும் மதுரகவியார் * எம்மை
ஆள்வார் அவரே அரண்

---

## திருவாய்மொழி தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தது

ப$_4$க்தாம்ருதம் விஷ்வஜநாநுமோத$_3$நம்
ஸர்வார்த்த$_2$த$_3$ம் ஸ்ரீஷட$_2$கோபவாங்க்$_3$மயம் |
ஸஹஸ்ரஷாகோ$_2$பநிஷத்ஸமாக$_3$மம்
நமாம்யஹம் த்$_3$ராவிட$_3$வேத$_3$ஸாக$_3$ரம் ||

### ஈச்வரமுனிகள் அருளிச் செய்தது

திருவழுதி நாடென்றும் தென்குருகூர் என்றும் *
மருவினிய வண்பொருநல் என்றும் * - அருமறைகள்
அந்தாதி செய்தான் அடி இணையே எப்பொழுதும் *
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து

### சொட்டை நம்பிகள் அருளிச் செய்தது

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும் *
இனத்தாரை அல்லாது இறைஞ்சேன் * - தனத்தாலும்
ஏதும் குறைவிலேன் * எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று

### அநந்தாழ்வான் அருளிச் செய்தது

ஏய்ந்த பெரும் கீர்த்தி இராமானுச முனி தன் *
வாய்ந்த மலர்ப் பாதம் வணங்குகின்றேன் * - ஆய்ந்த பெரும்
சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும் *
பேராத உள்ளம் பெற

### பட்டர் அருளிச் செய்தவை

வான் திகழும் சோலை மதிள் அரங்கர் வண்புகழ் மேல் *
ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும் * - ஈன்ற
முதல் தாய் சடகோபன் * மொய்ம்பால் வளர்த்த
இதத் தாய் இராமானுசன்

மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும் *
தக்க நெறியும் தடையாகித் - தொக்கியலும் *
ஊழ் வினையும் வாழ் வினையும் ஓதும் குருகையர் கோன் *
யாழின் இசை வேதத்தியல்

---

## இராமானுச நூற்றந்தாதித் தனியன்கள்

### வேதப் பிரான் பட்டர் அருளிச் செய்தவை

முன்னை வினை அகல மூங்கிற் குடி அமுதன் *
பொன்னங் கழற் கமலப் போதிரண்டும் * - என்னுடைய
சென்னிக்கணியாகச் சேர்த்தினேன் * தென் புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான்?

நயந்தரு பேரின்பம் எல்லாம் பழுதின்றி நண்ணினர் பால் *
சயந்தரு கீர்த்தி இராமானுச முனி தாளிணை மேல் *
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமுது ஓங்கும் அன்பால்
இயம்பும் * கலித்துறை அந்தாதி ஓத இசை நெஞ்சமே!

இனி என் குறை நமக்கு? எம்பெருமானார் திருநாமத்தால் *
முனி தந்த நூற்றெட்டுச் சாவித்திரி என்னு நுண்பொருளை *
கனி தந்த செஞ்சொல் கலித்துறை அந்தாதி பாடித் தந்தான் *
புனிதன் திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே

## அபியுக்தர் அருளிச் செய்தது

சொல்லின் தொகை கொண்டு உனதடிப் போதுக்குத் தொண்டு செய்யும் *
நல்லன்பர் ஏத்தும் உன் நாமம் எல்லாம் என்தன் நாவின் உள்ளே *
அல்லும் பகலும் அமரும்படி நல்கு அறு சமயம்
வெல்லும் பரம! * இராமானுச! இது என் விண்ணப்பமே

## நாலாயிர திவ்ய ப்ரபந்த தனியன்கள் ஸம்பூர்ணம்